# ஆண்டவரின் பாடுகளின் குருத்து ஞாயிறு திருப்பலி
# A ஆண்டு - 29 மார்ச் 2026

**ஆண்டவரின் பாடுகளின் குருத்து ஞாயிறு A ஆண்டு மார்ச் 29 2026**

**குருத்தோலை பவனிக்கு முன் நற்செய்தி வாசகம்: மத் 21:1-11**

**குருத்தோலை பவனிக்கு முன் முன்னுரை :**

ஒரு கதையுடன் இந்த முன்னுரையை ஆரம்பிக்கலாம். ஒரு கிராமத்திற்கு ஒரு பெரிய மனிதர் வருவதாக இருந்தது. அந்த கிராமமே ஒருங்கிணைந்து வரவிருக்கும் அந்த பெரிய மனிதருக்கு சிறப்பான வரவேற்பை வழங்க முடிவெடுத்து அதற்கான எற்பாடுகள் சிப்பாப நடந்துக் கொணடிருந்தன. வீதிகளும் தெருக்களும் துப்புரவாக்கப்பட்டன. வரவேற்புப் பதாகைகள ஆங்காங்கே வைக்கப்பட்டன. அவரது வருகையின் நேரம் அறிந்த மக்கள் அந்த நேரத்திற்கு முன்னாலேயே அவர் வரவிருக்கும் பாதையின் இருமருங்கிலும் கூடிவிட்டனர். அனைவர் முகங்களிலும் ஒருவிதமான எதிாப்பர்ப்பு தெரிந்தது. அவர்கள் ஆவலோடு காத்திருந்த அந்த பெரியவரின் ஊர்வலமும் கிராமத்திற்குள் நுழைந்தது. ஆனால் யாருமே சற்றும் எதிர்ப்பாராத ஒரு நிகழ்ச்சி அங்கே நடந்தேறியது. அந்த பெரிய மனிதருக்காக அலங்கரித்து வைத்திருந்த அந்த இடத்தில் அவரது ஊர்தி நிற்கவில்லை. மாறாக கிராமத்தின் குறுகிய சந்து ஒன்றில் நுழைந்தது. அந்தப் பகுதி சேறும் சகதியுமான ஏழைகள் ஒதக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிக்குள் நுழைந்துவிட்டது அவரது அச்செயலைக் கண்ட பெரும்பான்மையான மக்கள் நழுவிவிட்டனர். வெகு சிலரே அவரைப் பின் தொடர்ந்துச சென்றனர்.

அகண்ட தூய்மையான வீதியில் ஒருவரை ப்ன்பற்றிச் செல்வது சுலபம். ஆனால் அந்த பயணம் அதற்கு எதிராகத் திரும்பினால் பாதை மாறினால் பின் செல்வது சிரமம்.

இன்று நாமும் கூட்டத்தில் ஒருவராக மீண்டும் நிற்கிறோம். அன்ற எருசலேமின் வீதிகளில் மகிழ்ச்சிப் பெருக்கோடு யூதரின் அரசராக சிறப்பாக கைகளில் குருத்தோலை ஏந்தி நம்பிக்கையோடும் எதிர்ப்பார்ப்போடும் இயேசுவைப் பின்பற்றிச் சென்ற மக்களை நினைவுக் கூர்ந்து நாமும் குரத்தோலைகளை ஏந்தி நிற்கிறோம். ஆனால் இன்றைய நமது விழா பண்டைய நிகழ்வுகளை மட்டும் கொண்டாடும் விழா அல்ல அது நம்மில் பல கேள்விகளையும் எழுப்புகின்றது.

நாம் இயேசுவை அவா அகண்ட நேரான வீதிகளில் கொண்டாட்டங்கள் புகழ்ச்சிகளுக்கு நடுவில் பயணிக்கும் போது மட்டுமே பின்பற்ற விரும்புகிறோமா? அல்லது அந்தப் பாதை நம்மை தியாகபலிக்கும், தாழ்ச்சிக்கும் சிலுவைக்கும் இட்டுச் செல்லும் போதும் அவரைப் பின்பற்றி தயராக இருக்கிறோமா?

இந்த குருத்து ஞாயிறு பவனியில் நாம் வெறும் குருத்தோலையைக் கையிலேந்தியவர்களாக. உதட்டளவலில் அவரைப போற்றிப் பாடி துதிப்பவர்களாக மட்டும் பயணிக்கக் கூடாது மாறாக திறந்த உள்ளத்தோடு அவர் எங்கெல்லாம் செல்ல விரும்புகிறாரோ அங்கெல்லாம் அவரைப் பின் பற்றிச் செல்ல தயாராவோம்.

இப்போது நாம் நம் ஆண்டவர் அன்று எருசலேமிற்குள் நழைந்த அந்த நிகழ்வைக் கூறும் நற்செய்திக்கு செவிமடுப்போம். (மத் 21: 1-111).

**மறையுரை 1 - மத் 21:1-11 - குருத்தோலை பவனிக்கு முன்**

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு வகுப்பாசிரியர் தன் மாணவமணிகளிடம் ஒரு அரசனின் படத்தை வரையுமாறுக் கூறினார். அநேக குழந்தைகள் அரசனை கிரீடம், சிங்காசனம், கோட்டைக் கொத்தலங்கள், போாச்சேவகர்கள், கொடிகள் என புடைசூழ வரைந்திருந்தனர். ஒரே ஒரு குழந்தை மட்டும் ஒரு எளிய மனிதன் தன் மிதிவண்டியை நடு வீதியில் ஓட்டிக் கொண்டும், வீதியில் முகத்தில் புன்னகையோடு, சந்திக்கும் மக்களோடுப் பேசிக்கொண்டும் பயணம் செய்துக் கொண்டிருந்தான். அவனுக்கு கிரீடமோ சேவகர்களோ இல்லை. அந்த ஒவியத்தைக் கண்ட ஆசிரியர் ஏன் அந்த ஒவியத்தை அப்படி வரைந்தது' என்றுக் கேட்க அது "சிறந்த அரசர் என்பவர் மக்களோடு நெருங்கியத் தொடர்பில் இலுப்பவரே" என்று பதிலளித்தது. அரசரைக் குறித்து முக்கியமானக் கருத்தைக கற்றுக் கொண்டிருந்தது.

இன்று நம் திருஅவை குருத்தோலை ஏந்தி நிற்கும் நம்மை ஒரு அரசரை வரவேற்பதுபோல வரவேற்க வேண்:டும் என்ற நமக்குக் கற்பிக்கிறது. அதே சமயம் உலகத் தலைவர்களிடம் உள்ளது போன்ற எதிர்ப்பார்ப்புகள் நம்மிடம் இருத்தலாகது என திருஅவை நம்மிடம்

எதிர்பபார்க்கிறது. இயேசுவின் அன்றைய எருசலேமி பிரவெசம் போருக்குப் போகும் அரசரைக் குறித்துக் காட்டவில்லை. மாறாக அவர் அமர்ந்து வந்தது ஒரு கோவேறக் கழுதையின் மீதுதான். அவர் பின்னே படைவீரரத் திரள் இல்லை. அவரது வல்லமையைக் குறித்து பறைசாற்றும் பதாகைகள் ஏதுமில்லை. ஆனால் அவரைப் பின்பற்றி வந்தவர்கள் சாமான்ய மக்கள். அவர்கள் எளிய மீன்பிடித் தொழிலாளர்களகள், தாய்மார்கள், குழ்ந்தைகள், நோயாளர் மட்டுமே. அவர்கள் தங்கள் ஆடைகளை அவர் அமர்ந்திருக்கும் விலங்கு நடக்கும் பாதையில் விரித்தார்கள். பக்கத்திலிருக்கும் மரங்களிலிருந்து கிளைகளை உடைத்து அவரை நோக்கி அசைத்து அவரை வரவேற்றனர். அந்த பவனி யாரோ அவர்களை கட்டாயப்படுத்தி நடத்தப்பட்ட பவனி அல்ல ஆனால் அது ஒரு நம்பிக்கையின் பவனி.

அவரைப் பின் சென்ற மக்கள் ஹோசன்னா என்ற கோஷத்தை எழுப்பினர். அது வெறும் புகழ்சிசக்காக எழுப்பப்பட்டது அல்ல. அந்த வார்த்தையின் பொருள் ”எங்களை மீட்டருளும்” ஆண்டவரே”.

அந்த வாழ்த்தொலி நசுக்கப்பட்ட, புறந்தள்ளப்பட்ட மறக்கப்பட்ட மக்களின் பெரும் அழுகையின் கூக்குரல். அவர்கள் ஒரு புகழ்பெற்ற முக்கியஸ்தரை வரவேற்கவில்லை. தங்கள் துன்பங்களை தங்கள் வேதனைகளை நன்குப் புரிநதுக் கொண்ட ஒருவரின் மீது வைத்த நம்பிக்கையின் கூக்குரல். அவர்கள் கூக்குரலை இயேசு அதிலிருந்த தவறகளை திருத்தம் செய்துக் கொண்டிருக்கவில்லை. அவர்களது நம்பிக்ழகழய அமைதிப்படுத்தவும் விரும்பவில்லை. தாம் இவ்வாற வரவேற்கப்படுவதை அவர் விரும்பினார். ஏனெனில் இன்னும் சில நாட்களில் இந்த நகரமே தமக்கு எதிராக திரும்பும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். இச்செய்தி நமக்கு இறைவனின் இதயம் குறித்த செய்தியை நமக்கு அறிவிக்கிறுது.

ஒருமுறை நான் ஒரு மனிதன் தன்னந்தனியனாக இறக்கும் மனிதனை ஒரு மருத்துவமனை கட்டல் ஒன்றில் படுத்திருப்பதைக் கண்டேன/ அய்கிருந்த செவிலியர் ஒருவர் என்னிடம் ”பல வாரங்களாக இந்த மனிதரை பார்க்க யாருமே வரவில்லை. ஒருநாள் ஒருவர் இவரது கட்டிலின் பக்கத்தில் வந்து அமர்ந்தார். கண் விழித்துப் பார்த்த இந்த மனிதர் அந்த மனிதரைப் பார்த்து ”என்னைப் பார்க்க யாருமே வரமாட்டார்கள் என்றுத் தான் நினைத்தேன்” என்றார்” என்றுக் கூறினார். அந்த நேரம் எனக்கு உலகம் அறிந்துக் கொள்ள இயலாத ஒரு குருத்தோலை ஞாயிறு அங்கே வந்திருப்பதை உணர்ந்துக் கொண்டேன். அங்கே ஒரு அரசர் வருகிறார். தனது படைபத்துடன் அல்ல மாறாக தமது பிரசன்னத்தால் பிரசன்னத்தை அளிக்க வருகிறார்.

இயேசுவின் அரசாட்சி இப்படியே உள்ளது. மக்களின் இயல்பான வாழ்வின் மததியில் தான் இயேசு அவர்களைத் தேடி வருகிறார். அவர் எங்கெல்லாம் பிரிவுகள் பிளவுகள், குழப்பங்கள், உறுதியற்ற நிலையில் உள்ள நகர்களுக்குள், மனித இயதங்களுக்குள் அவர் வர விரும்புகிறார். எருசலேம் அவரை மகிழ்ச்சியோடு வரவேற்கிறத. ஆனால் அந்த மகிழ்ச்சி மிகவும் தளர்ச்சியான மகிழ்ச்சி. மக்களிடத்தில் உள்ள எதிர்ப்பார்ப்பகள் ஏராளம் ஆனால் அவர்களின் புரிதல் வெகு சொற்பம். அவர்கள் பலிகள் இல்லாமல் கர்பாற்றப்பட விரும்புகார்கள், சரணாகதியடையாமல் வெற்றிப் பெற ஆசைப்படுகிறார்கள். நம்மைக் குறித்து சிந்தித்தப் பார்ப்போமானல் நாம் அவர்களிலிருந்து வேறபட்டவர்கள் அல்ல. இன்று நாம் குருத்தோலைகளை ஏந்திக் கொண்டிருக்கிறோம் ஆனால் நம்மில் பலர். அவரைக் குஜித்த எதிா மறை எண்ணங்களைக் கொண்டிருக்கிறோம். நாம் இயேசுவைப் போற்றிப் புகழ்கிறோம். ஆனால் அவர் பயணிக்கும் பாதை கடினமாக நம்மிடம் அதிகம் எதிர்ப்பார்ப்பதாகத் தெலிந்தால் நாம் அதைக் குறித்துப் போராடுகிறோம். நாம் ஆசீர்வாதங்களை விரும்புகிறோம் ஆனால் அத்துடன் வரும் சிலுவைவ நாம் ஏற்றக்கொள்ளத் தயங்குகிறோம். ஆனால் இயேசு நம்மிடம் வருவதற்குத் தயங்குவதில்லை.

ஒரு முறை நான் ஒரு பெண்மணியை சந்தித்தேன். அவர் என்னிடம் ”நான் இப்போதெல்லாம் ஆலயம் செய்வதை நிறத்திக் கொண்டுள்ளளேன். எனெனில் இறைவன் என்னிடம் வந்தால் அவர் என்னைக் குறித்து அதிகதமாக ஏமாற்றமடைவார்” என்றார். சில ஆண்டுகளுக்குப்பின் அவர் ஆலயத்திற்குத் திரும்பினார். ஆனால் தனது வெறான எண்ணங்களால் அவள் அதிகமாகக் களைப்படைந்திருந்தாள். அவரிடம் காரணம் கேட்கப்பட்போது ”நான் ஒருபோதம் இறைவனை என் பக்கமாக ஈர்க்கத் தேவையில்லை. ஆனால் அவர் என்னுள் நழைந்து செயலாற்றச் செய்தால் போதுமானது: என்றார். அது ஒரு குருத்து ஞாயிறு்.

இயேசு தமக்குக் காத்திருக்கும்இ தன்பங்களான தாம் காட்டிக்கொடுக்கப்படல், தமது பாடுகள், ஆகியவை நிகழப்போவதை நிச்சம் அறிந்திருந்தும் எருசலேம் நகருக்குள் நுழைகிறாா. அவர் அனைத்தையும் அறிந்திருந்தும் அமைதியாக கழுதை மீதேறி பயணம் செய்கிறார். தனது பாாையையம் அநிந்தே அதில் வேணடுமென்றே பயணிக்கிறார். தனது பத்திரமான நிலையைவிட மக்கள் மீதுத் தாம் கொண்டுள்ள அன்கைப முன்னிலைப்படுத்து கிறார். இது அவரது பலகீனத்தைக் காட்டவில்லை மாறாக துணிச்சலாள ஆழமான அன்பை எடுத்துரைக்கிறது.

அவரது பெரும்பான்மையனப் பணிவாழ்வில் அவர் எப்போதும் சுறுசுறுப்பாகவே இயங்கினார். அவர் பிணியாளிகளை நலமாக்கினார், நல்லவ்கை கற்பிம்தார். மகமந்நம் பெறச் செய்தார், சிறுக்குழந்தைகளைத் தம்மிடம் வரஆவற்றார். இல்லங்களைச் சென்று சந்தித்தார், மற்றவர்களோடு உணவைப் பகிர்ந்து உண்டார், பாவங்களை மன்னித்தார். இந்த அவரது செயல்கள் வழியாக அவர் இறையாட்சியை வெளிப்படுத்தினார். அது இறைவனின் வழ்விகம் அன்பாக இருந்தது. ஆனால் அவர் கெத்சமெனே தோட்டத்தில் கைது செய்யப்பட்டப்பின் அவரது அனைத்து செயல்பாடுகளும் நின்றுவிட்டன. அதன்பின் அவருக்கு இழைக்கப்பட்டவை யாவும் கொடூரமான சித்திரவதைகள், நீதியற்ற முறையில் கொடுமைகள் இழைக்கப்பட்டன. அவர் தம் சீடர்களான யூதாஸ் இஸ்கரியோத்தால் காட்டிக் கொடுக்கப்பட்டார். மற்றொரு சீடராக பேதருவால் மறதளிக்கப்பட்டார். அவர் அடித்து நொறுக்கப்பட்டார். ஏளனம் செய்ப்பட்டார். தண்டிக்கப்டுவதற்கென அவர் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டார்.

திருப்பலி வாசகங்கள்

முதல் வாசகம் : எசா 50:4-7
2ஆம் வாசகம்: பிலி 2: 6-11
நற்செய்தி வாசகம்: மத் 26: 14-27, 66